2005 ஏப்ரல் 7]

(இ) விதி 55 (6)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நாளை (8–4–2005), இரண்டிற்கும் மேற்பட்ட கவன ஈர்ப்பு அறிவிப்புகளை... (குறுக்கீடுகள்) ஐயா, கொஞ்சம் உட்காருங்கள் (குறுக்கீடுகள்) இரண்டிற்கும் மேற்பட்ட கவன ஈர்ப்பு அறிவிப்புகள் எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதி 55(6)-ஐத் தளர்த்தி, நாளை (08–04–2005), இரண்டிற்கும் மேற்பட்ட கவன ஈர்ப்பு அறிவிப்புகளை எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (08–04–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

103. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சித் (சி.4) துறையின் 27–10–2004 ஆம் நாளிட்ட 164 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[2005 ஏப்ரல் 7

104. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மாவட்ட ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், கிராம ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்களின் பதவி விலகலை ஏற்றுக்கொள்ளுதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சித் (சி.4) துறையின் 1–11–2004 ஆம் நாளிட்ட 167 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

105. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சித் (சி.4) துறையின் 1–11–2004 ஆம் நாளிட்ட 168 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

106. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பொதுச் சாலைகளையொட்டி அல்லது பொதுச் சாலைகளில் போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சித் (சி.4) துறையின் 23–12–2004 ஆம் நாளிட்ட 184 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

107. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் நீர் ஆதாரங்களில் மீன்பிடி குத்தகை மற்றும் உரிமம் வழங்குவதை முறைப்படுத்தல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சித் (சி.4) துறையின் 5–1–2005 ஆம் நாளிட்ட 1 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

199. திரு எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை.